TAMIL ... 29 AUG 1978 MADRAS

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

திங்கட் கிழமை, 1978 மார்ச் 20

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. இரங்கற் குறிப்பு.

இந்திய நாடாளுமன்றத்தின் முன்னாள் தலைவரும், பீகார் மாநில முன்னாள் ஆளுநருமான திரு. எம். அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இந்திய நாடாளு மன்றத்தின் முன்னாள் தலைவரும், பீகார் மாநில முன்னாள் ஆளு நருமான திரு. எம். அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் 19-3-1978 ஆம் தேதியன்று மறைந்ததை இம்மேலவைக்கு வருத் தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அனந்தசயனம் ஐயங்கார், சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்டு சிறை சென்றவர். அவர் 1934ஆம் ஆண்டி லிருந்தே மத்திய சட்ட சபை உறுப்பினராக இருந்தவர். 1952 முதல் 1956 வரை நாடாளுமன்றத்தின் துணைத் தலைவராகவும், பிறகு 1956ல் இருந்து 1962 வரை அம் மன்றத்தின் தலைவராக வும் இருந்தார். பின்னர் பீகார் மாநில ஆளுநராக இருந்தார்.

மறைந்த திரு. அனந்தசயனம் ஐயங்கார் அவர்களும் நானும் இங்கிருந்து 1100 மைல்களுக்கு அப்பால் இன்று மகாராஷ்டி ராவில் உள்ள அமராவதி சிறைச்சாலையில் ஒன்றரை ஆண்டு காலம் சேர்ந்து சிறை வாழ்க்கை நடத்தினோம். நீண்டகாலமாக அவரை மதிப்பிற்குரிய பெரிய தலைவராக ஏற்று கருதி மதித்து வந்தேன்.

அன்னாரின் மறைவு குறித்து இம்மன்றம் வருந்துகிறது. அவரை இழந்துவிட்ட குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரி வித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்பு மிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.